# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.59/2024

வாதி தரப்பு 4 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அழகர்சாமி | வா.சா.–4 | |
| த/பெ. | பெருமாள் | | |
| கிராமம் | | தொழில் | விவசாயம் |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 62 |

---

முதல் விசாரணை 20–07–2026.

நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியமளிக்க இன்று ஆஜராகியுள்ளேன். அழைப்பாணை சார்பு நகல் **சா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட ஆதார் அட்டை நகல் **சா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நான் பாலவநத்தம் கிராமத்தில் எத்தனை வருடங்களாக இருக்கிறேன் என்றால் பிறந்ததிலிருந்து அங்குதான் இருக்கிறேன். எனக்கு சார்பு செய்யப்பட்ட அழைப்பாணையில் சொல்லியுள்ள ஆவணங்கைள நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். சீத்தாலெட்சுமி என்பவர் தூத்துக்குடியிலிருந்து அவருடன் 8 நபர்களுடன் என்னை வந்து பார்த்து மேற்படி ஆவணங்களை கொடுத்து அந்த சொத்தை விற்றுகொடுக்க சொன்னார். ஆவண எண்.110/2009 இணையதள நகல் 1ம் பிரதிவாதி என்னிடம் கொடுத்து விற்கச்சொன்னார். மேற்படி ஆவணம் **சா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. குருசாமி என்பவரின் இறப்புச்சான்றிதழ் சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.10**, செல்லம்மாள் என்பவரின் இறப்புச்சான்றிதழ் சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.11**, சண்முகம் என்பவரின் இறப்புச்சான்றிதழ் கணினி நகல் **சா.சா.ஆ.12**, கருப்பசாமி என்பவரின் வாரிசு சான்றிதழ்

கணினி நகல் **சா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அழைப்பாணையில் உள்ள ஆவணங்களை சீதாலெட்சுமி என்பவர் என்னிடம் கொடுத்த பிறகு சொத்தின் உரிமையாளரான சிவகாமிஅம்மாளை பார்த்து விற்பனை செய்யக்கேட்டபோது அந்த சொத்து சிவகாமி என்பவர் பெயருக்கு தீர்ப்பாகிவிட்டதாக சொன்னார். அதனை சீதாலெட்சுமி என்பவரிடம் சொன்னபோது எப்படியாவது விற்றுக்கொடுங்கள் என்று மட்டும் சொன்னார்கள். நான் முடியாது என்று சொல்லிவிட்டேன். என்னிடம் தந்த ஆவணங்களை திரும்ப பெற்றுக்கொள்ளவில்லை என சாட்சி கூறுகிறார்.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.07.20 15:54:17 +0530